அன்னார்களது மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 514, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

திரு. எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) இது அவருடைய தொகுதி பற்றிய பிரச்சினை.

வினா எண். 515, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. வ. சத்திய மூர்த்தி இருக்கையில் இல்லை.

வினா எண். 516, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

516—

புதியதாக ஆரம்பப் பள்ளிகள் துவங்குதல்.

*5478—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேரன்மகாதேவி தொகுதி கடையம் ஊராட்சி ஒன்றியம் வெங்காடம்பட்டி ஊராட்சி மணல் காட்டானூரில் புதியதாக ஆரம்பப் பள்ளி துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்படி வெங்காடம்பட்டி ஊராட்சி மணல் காட்டானூரில் புதிதாக ஆரம்பப் பள்ளி துவங்குவது குறித்தக் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

1992 ஏப்ரல் 9]

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்காடம்பட்டி ஊராட்சியில் உள்ள மணல் காட்டானூரில் ஆரம்பப்பள்ளி ஒன்று அமைப்பதற்காக கடையம் சரகத்திலிருந்து ஏ.இ.ஓ. ஆபீஸ் மூலம், ஆரம்பப் பள்ளி இயக்குநர், சென்னை அதிகாரிக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக் கிறது.

இந்த மணல் காட்டானூரைச் சுற்றி 6 கிராமங்கள் உள்ளன. அதில் சுமார் 3,000 ஜனத்தொகை உள்ளது. இவர்கள் ஆரம்பக் கல்வி கற்பதற்காக பக்கத்தில் 8 கிலோ மீட்டர் தூரமுள்ள வள்ளியம்மாள்புரம் வரை சென்று தான் ஆரம்பக் கல்வி கற்க வேண்டிய நிலை இருக்கிறது. அதனால் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் இதை பரிசீலனை செய்து இந்த நடப்பு ஆண்டில் செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டில் பரி சீலனை செய்யத்தக்க வகையில் புதிய பரிந்துரைகளை உரிய நேரத்தில் அனுப்புமாறு 10—1—1992 நாளிட்ட அரசு கடிதத் தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 517, திரு. ச புரட்சிமணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

517—

*5647 திரு. ச. புரட்சிமணி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மங்களூர் தொகுதியில் ஐ. ஏந்தல் கிராமத்தில் புதிதாக அரசு ஆரம்பப் பள்ளி அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ச. புரட்சிமணி: பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் இந்த கிராமம் மிகவும் கிளை கிராமம் ஆகும். இந்த கிராமத்தில் இந்திய நாடு சுதந்திரம் பெற்ற காலத்தி லிருந்து இதுவரை அரசால் ஆரம்பப் பள்ளி அமைக்கப்பட வில்லை. எனவே இந்த கிராமத்தில் அரசு ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.